**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender :**
**Miscellaneous : CC Case No.94/2021**
**Sessions :**
**Deposition of Witness for :PW9 ,LW9**

| | |
|---|---|
| Name | **வாசுதேவன்** |
| Father's/Husband Name | |
| Village | |
| Taluk | |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 23rd day of November 2022.**

முதல் விசாரணை:-

1. நான் தற்போது செங்கல்பட்டு மாவட்ட குற்ற பிரிவில் உதவி ஆய்வாளராக பணி செய்து வருகிறேன்.

2. கடந்த 20/12/2020 ம் தேதி 17.00 மணியளவில் உதவி ஆய்வாளராக அனைக்கட்டு காவல் நிலை பொருப்பில் இருந்தபோது சத்தியமூர்த்தி என்பவர் நிலையம் ஆஜர்கி கொடுத்த புகாரினை பெற்று நிலைய குற்ற எண். 713/2020 இ.த.ச. பிரிவுகள் 341, 294 பி 323, 324, 506(2) உடனினைந்து பிரிவு 4 TNWH Act வில் வழக்கு பதிவு செய்தேன். ( **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. அவர் சம்பவ இடம் சென்று சாட்சிகள் மணி மற்றும் பாரதி ஆகியோர்களை முன்னிலையில் சம்பவஇடத்தை பார்வைஇட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைப்படம் தயார் செய்தேன். **(அந்த பார்வை மகசர் அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது)** பின் சாட்சிகள் சத்தியமூர்த்தி, சுஜாதா,

மனோகர், சுப்ரமணி, அரவிந்ராஜ் மற்றும் பார்வை மகசர் சாட்சிகளான மணி மற்றும் பாரதி ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமுலம் பதிவு செய்தேன்.

4.இவ்வழக்கின் எதிரிகளான தியாகரஜன் மற்றும் சியமலாதேவி என்பவர் முன்பிணையில் சென்றதால் அவரை கைது செய்ய இயலவில்லை. இவ்வழக்கின் காயம் பட்ட நபரான சுஜாத்தா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ஆனந்பாபு என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அவரிடம் இருந்து விபத்து பதிவேடு பெற்றேன்.

5.இத்துடன் விசாரணை முடித்து எதிரிகள் மீது இ.த.ச. பிரிவுகள் 341, 294 பி 323, 324, 506(2) உடனிணைந்து பிரிவு 4 TNWH Act வில் இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அ.சா.3 மனோகர், அ.சா.4 சுப்ரமணி, அ.சா.5 அரவிந்ரஜ் ஆகியோர்கள் எனது விசாரணையில் எதிரிகள் குற்றம் புரிந்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள். அ.சா.8 எனது விசாரணையில் சம்பவ இடத்தை பார்வை இட்டபோது உடன் இருந்ததாக வாக்குமூலம் அளித்துள்ளார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>:-

6. "கடந்த 17.12.2020 ம் தேதி காலை 10 .30 மணி அளவில் எங்கள் வீட்டில் வாசல் எதிரில் ரோட்டை துப்புறவாளர்கள் துப்புறவு பணியை செய்து கொண்டு இருந்தார்கள். அப்போது நான் அவர்களிடம் ஏற்கனவே துப்புறவு செய்ததை எடுக்காமல் அதன் மேலே குப்பைகளை கொட்டுவதால் கொசு வருவதாகவும் துருநாற்றம் அடித்தாகவும் சொன்னேன்" என்று அ.சா.1 எனது விசாரணையின் போது சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை.

7. 18/12/2020 ம் தேதி 1ம் எதிரி தியாகராஜனின் அண்ணன், உறவினர்கள் என்னிடம் வந்து அடிக்க வந்தார்கள் என்றும் அதன் பின் அங்கு இருந்த நபர்கள் மடக்கி விட்டதால் சென்று விட்டார்கள் என்றும் எனது விசாரணையில் அ.சா.1 சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

8. மதியம் சுமார் 1.30 மணி அளவில் ஊரில் இருந்து போன் வந்தது என்று அ.சா.1 எனது விசாரணையில் சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

9.எனது மனைவி சுஜாதாவை, தியாகராஜன் என்பவர் கத்தியால் கையில் வெட்டிவிட்டதாகவும், சியாமளா (ஆஜர் 2 ம் எதிரி மற்றும் தியாகராஜன்–1 ம் எதிரி) பெண்ணுறுப்பில் எட்டி உதைத்தாகவும் துணி எல்லாம் கிழித்து அடித்து விட்டதாக சொன்னார்கள் என்றும் நான் கேள்வி பட்டு லத்தூருக்கு வந்தபோது என் மனைவியை சிகிட்சைக்காக பவுஞ்சூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்றதாகவும் எனது விசாரணையில் அ.சா.1 சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

10.சுமார் 2 வருடததிற்கு முன்பு காலையில் எனது விட்டருகே துப்புறவு பணி நடந்து கொண்டு இருந்தபோது தன் கணவர் அவர்களிடம் குப்பைகளை மேலே மேலே கொட்டுவதால் கொசு வருகிறது என்றும் துர்நாற்றம் வருகிறது என்றும் கேட்டார் என்று அ.சா.2 எனது விசாரனையின் போது சொல்லியுள்ளாரா என்றால் இல்லை.

11. பின் தனது கணவர் பவுஞ்சூரில் உள்ள Health Inspector ம் புகார் கொடுத்தார் என்றும். அதன் பின் தியாகராஜனின் உறவினர்கள் என் வீட்டருகே வந்து அவர்கள் தனது கணவர் வீட்டில் படுத்துக்கொண்டு இருந்தபோது வெளியே வாடா என்று சொல்லி அடிக்க வந்தார்கள் என்று எனது விசாரணையில் அ.சா.2 சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு சொல்லவில்லை வட்டார வளர்ச்சி அலுவரிடம் சொன்னதாக சொல்லியுள்ளார்.

12. அதன் பின் தியாகராஜனின் உறவினர்கள் என் வீட்டருகே வந்து அவர்கள் தனது கணவர் வீட்டில் படுத்துக்கொண்டு இருந்தபோது வெளியே வாடா என்று சொல்லி அடிக்க வந்தார்கள் என்றும் 2 நாள் கழித்து தன் கணவர் மதுராந்தகம் வேலை விசயமாக சென்று இருந்தபோது நான் தியாகராஜன் வீட்டருகே லோன் கட்டுவதற்காக சென்ற போது தியாகராஜனின் அன்னி சியாமளா தன்னை முடியை பிடித்து இழுத்து அடித்துக்கொண்டு இருந்தார்கள் என்று அ.சா.2 எனது விசாரனையில் சொல்லியுள்ளாரா என்றால் முடியை பிடித்து அடித்ததாக சொல்லியுளார் கையாலும், காலும் அடித்ததாக சொல்லியுள்ளார் என்றாலும் மேலும் அ.சா.2 எனது விசாரனையின் போது எதிரிகள் தனது நைட்டியை பிடித்து இழுத்து கிழித்து விட்டதாக சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு எதுவும்

சொல்லவில்லை.

13. சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன்பு காலை 11 மணியளவில் நானும் சத்மதிமுர்த்தியும் மதுராந்தகம் சென்றிருந்தோம் என்று அ.சா.8 எனது விசாரனையில் சொல்லியுள்ளரா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை மேலும் சத்தியமூர்த்தியின் மனைவி சுஜாத்தா என்பவரிடம் இருந்து அவருக்கு போன் வந்தது அதில் சுஜாத்தாவை அடித்து விட்டதாக சொன்னார்கள். அதன் பின் நாங்கள் இருவரும் வீட்டிற்கு சென்று பார்த்தபோது சுஜாத்தாவிற்கு கையில் அடிப்பட்டிருந்தது அவரை சிகிச்சைக்காக பவுஞ்சுர் மருத்துவமனைக்கு அழைக்து சென்றோம் என்று அ.சா.8 எனது விசாரனையில் சொல்லியுள்ளாரா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை.

14. இவ்வழக்கு சம்மந்தமாக 20/12/2020 அன்று புகார் கொடுக்கப்ட்டது. அ.சா.1 மற்றும் அ.சா.2 ஐ 20/12/2020 அன்று மாலை 17.30 காவல் நிலையத்தில் வைத்து விசாரித்தேன். சாட்சிகளை விசாரித்த வாக்குமூலங்களில் எனது முத்திரை எதுவும் போடபடவில்லை என்றால் சரிதான். தினமும் எங்கள் காவல் நிலையத்தில் இருந்து நீதிமன்றத்திற்கு காவலர் ஒருவர் பணிக்கு வருவார் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை 04/01/2021 அன்று 14 நாட்கள் காலதாமதமாக அனுப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

15. 04/01/2021 அன்று எனது மேல் அதிகாரிக்கு பவ்வியபட்டு இந்த முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது என்றால் சரியல்ல. லத்தூரில் இருந்த அனைக்கட்டு காவல் நிலையத்டதற்கு இரு சக்கர வாகனத்தில வந்தார் சுமார் அரை மணிநேரத்தில வந்துவிடாலாம். சம்பவம் 19/12/2020 அன்று மதியம் சுமார் 1.30 மணியளவில் நடைபெற்றதாக சொல்லப்படுகிறது என்றால் சரிதான்.

16. எங்கள் காவல் நிலையத்திற்கு புகார் சுமார் 28 மணிநேரம் காலதாமதாக கிடைக்கப்பெற்றது என்றல் சரிதான். இந்த காலதாமதமான நேரத்தில் வேறு ஒருவரிடம் சட்டம் குறித்து விசாரனை செய்து இவ்வாரான வழக்கை ஜோடனை செய்ய வாய்புள்ளதாக என்றால் வாய்புள்ளது.

17. முதல் அ.சா.1 கைபட எழுதிய புகாரில் வீட்ருகே உள்ள சில நபர்கள் தன்னை தாக்கியதாக குறிப்பிட்டிருந்தார் என்றால் சரியல்ல. அதில் எதிரிகள் குறித்து எந்த குற்றசாட்டும் சுமத்தபடவில்லை என்றால்

அது தவறு. 17/12/2020 அன்று 1ம் எதிரிக்கும் கால்வாய் வாரும் பணியாளர்களுக்ம் இடையே பிரச்சனை இருந்தது என்றால் சரிதான். அது சம்ந்தாக 1ம் எதிரி என்னிடம் புகார் கொடுக்க வந்திருந்தார் என்றால் சரியல்ல. அந்த புகாரின் பெயரில் நான் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரியல்ல.

18. போலிஸ் ஸ்ட்ன்டிங் ஆர்டர் 588 படி ஒரே நிகழ்விற்கு 2 புகார்கள் வந்தார் அதை நீதிமன்றத்திற்கு அனுப்பவேண்டும் என்றாலும் போலிசாராகவே வழக்கு பதிவு செய்ய இயலாது என்றால் சரிதான். அரசியல் தலையீட காரணமாக அவர்களுக்கு எதரிகள் மீது தவறாக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. மேற்சொன்ன புகாரை பெற்று நடவடிக்கை எடுத்திருந்தால் உண்மையில் யார் தவறு செய்யதத என்று தெரிந்திருக்க ம் என்றால் சரியல்ல. 1ம் எதிரி அ.சா.1 ன் மீது புகார் கொடுக்க சென்றதால் அ.சா.1 முதலில் கொடுத்த புகாரை மாற்றி எதரிகள் மீது தவறான புகாரை கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல.

19. அ.சா.2 பவுஞ்சூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற பின்னர் காவல் நிலையம் வந்தார் என்றால் சரியல்ல. அ.சா.1 மற்றும் அ.சா2 ஐ அருகில் இருந்த ஊர்காரர்கள் கும்பலாக தங்களை தாக்கியதாக எனது விசாரணையில் சொட்லலியுள்ளாரா என்றால் அவ்வாறு எதுவும் சொல்லவில்லை. அ.சா.2 க்கு பவூஞ்சூர் மருத்துவமனையில் சிகிச்சை வழங்கயி மருத்துவரை நான் விசாரனை செய்தேனா என்றால் விசாரத்தேன். அவர் வழங்கிய விபத்து பதிவேடை பெற்றேனா என்றால் அது பற்றி எனக்கு நினைவில்லை. அந்த ஆவணத்தை நான் கைப்பற்றினேன் என்றாலும் அது எனது வழக்கை பாதிக்கும் என்பதால் மறைத்துவிட்டேன் என்றாலும் சரியல்ல.

20. எதரியின் வீடும் சாட்சிகளின் வீடும் அருகில் இல்லை என்றால் சரிதான். பஞ்சாயத்து அலுவலகமும் இரண்டு நபர்களின் வீடுகளின் அருகில் இல்லை என்றால் சரிதான். அ.சா.1 கேள்வி நிலை சாட்சி என்றாலும் கண்னுற்ற சாட்சி இல்லை என்றாலும் சரிதான். அ.சா.1 சம்பவம் குறித்து யார் சொல்லி தெரியவந்தது என்று எனது விசாரனையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றல் சரிதான். மேலம் போன் மூலமாக அவருக்கு தகவல் கிடைத்தாக எனது விசாரனையில் சொல்லவில்லை என்றால் சரிதான்.

21. அ.சா.1 எனது விசாரனையில் அ.சா.2 க்கு பவூஞ்சூர் மருத்துவமனையில சிகிச்சை பெற்று பின்னர் மதுராந்தகம் மருத்துவமைனையில் அவரை அனுமதித்து விட்டு பின்னர் அவரிடம் என்ன நடந்தது என்று கேட்டு தெரிந்து கொண்ட பின்னர் என்னிடம் புகார் கொடுத்ததாக சொல்லியுள்ளாரா என்றால் சரிதான். அ.சா2 எனது விசாரனையின் போது 19/12/2020 அன்று தனது கணவர் மதுராந்தகம் சென்றுவிட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். மேலும 17/12/2020 அன்று மதுராந்தகம் சென்றதாகதான் குறிப்பட்ப்ட்டுள்ளது என்றால் சரிதான். உண்மையிலேயே health inspector அல்லது BDO விடம் புகாரி கொடுத்ததாக எனது விசாரனையில் தெரியவந்ததா என்றால் அவ்வாறு எதுவும் புலப்படவில்லை.

22. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்று அ.சா.1 மதுராந்தகம் சொல்லவில்லை என்றாலும் உள்ளூரிலேயே இருந்தார் என்றாலும் சரியல்ல. காலதாமதமாக புகார் கொடுத்ததை ஈடு செய்யும் வரையில் அ.சா.1 மதுராந்தகத்திற்கு சென்றுள்ளதாக எனது ஆலோசனையின் பெயரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

23. உண்மையிலேயே மகளிர் குழு ஏதுவும் உள்ளதா என்று எனது விசாரனையில் நான் விசாரித்து தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். சுஜாத்தா உண்மையிலேயே மகளிர் குழுவில் உறுப்பினர் தானா என்பதை தெரிந்து கொள்ள அந்த பதிவேடுகளை பரிசீலனை செய்து கைப்பற்றினேனா என்றால் இல்லை.

24. 17/12/2020 அன்று 1ம் எதிரி அ.சா.1 மீது புகார் கொடுக்க வந்தார் என்றாலும அந்த புகார் மீது நடவடிக்கை எடுத்தால் அ.சா.1 மீது வழக்கு செய்யவேண்டி இருக்கும் என்பதால் அ.சா. 1 அந்த புகாரை எதிரிகள் மீது கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல.

25. சுஜாதா வீட்டருகில் எந்த மகளிர் குழுவும் இல்லை என்றாலும சண்டை போடவேண்டும் என்ற என்னத்தில் எதிரிகள் வீட்டருகே அவராகவே தன்னிச்சையாக சென்றார் என்றால் சரியல்ல.

26. தமிழ்நாடு பெண்கள் வன்கொடுமை தடுப்பு சட்டைத்தை பாதிக்கப்பட்டவர் ஒரு பெண் என்ற காரணத்திதனாலேயே பதிவு செய்தேன் என்றால் சரிதான். மேற்சொன்ன சட்டம் ஈவ்டீசிங் சட்டத்திற்கு மாற்றாக வந்தது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

27. இவ்வழக்கில் இறுதி அறிக்கையை 23/01/2021 அன்று தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள இறுதி அறிக்கையில் 1ம் எதிரி அ.சா.2 ன் தோள் மீது கை வைத்து தள்ளியதாக குறிப்பிடபட்டுள்ளது ஆனால் இந்த சங்கதியை சாட்சிகள் எனது விசாரணையிலோ அல்லது புகாரிலோ குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

28. இவ்வழக்கில் சட்டபரிவு 4 of TNWH Act ஐ எனது மேல் அதிகாரிகளின் அறிவுறுத்திலன் பெயரில் அ.சா.2 ன் தோளை 1ம் எதிரி தள்ளியதாக பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

29. அ.சா.2 சம்பவத்தை எட்டியப்பன், இளமதி ஆகியோர்கள் பார்த்ததாக எனது விசாரனையில் சொல்லியுள்ளார்களா என்றால் இல்லை. மேலும் எதிரிகள் சண்டையிட்டதால் பொதுமக்களுக்கு தொல்லை யாக இருந்ததாக எந்த சாட்சிகளும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

30. மதுராந்தகம் அரசு மருத்துவமனையில அ.சா.2 க்கு வழங்கப்பட்ட காயச்சான்றை பார்வை இட்டு கையை தவிற வேறு எங்கும் காயங்கள் இல்லை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அ.சா. 2 க்கு எடுக்கப்பட்ட xray ரிபோர்ட் எதையும் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

31. மேற்சொன்ன காயச்சான்று படி ஒரு நபர் தாக்ககியதாக குறிப்பிடப்பட்டுள்ளேத தவிற தாக்கிய நபர் ஆணா பெண்னா என்று குறிப்பிடபடவில்லை என்றால் சரிதான்.

32. இவ்வழக்கில் எதிரியால் பயன்படுத்தியாக சொல்லப்படும் ஆயுதத்தை கைபற்றவில்லை என்றால் சரிதான். பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடத்தை சம்பவ இடத்தில் வைத்து தயார் செய்தேன். சம்பவ இடம் வாதியின் வீட்டருகில் என்று பார்வை மகசரில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பார்வை மகசர் சாட்சிகளிடம் பார்வை மகசரில் கையொப்பம் எதுவும் பெறப்படவில்லை என்றால் சரிதான்.

33. இவ்வழக்கு தாக்கல் செய்துள்ள அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைது பின்னிட்டு என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. உண்மையிலேயே எதிரிகள் மீது எந்த தவறும் இல்லை என்று எனக்கு தெரிந்திருந்தாலும் அன்றை தினம் இருத்ந அரசியல்

பிரச்சனைகளால் எதிரிகள் மீது இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் எனற்ல் சரில்ல. அ.சா.8 முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரின் மகன் என்றால் சரிதான்.

34. 25/08/2020 அன்று 1 ம் எதிரியை பணிநீக்கம் செய்யவேண்டும் என்ற என்னத்தில் அ.சா.1 மற்றும் அ.சா8 BDO அலுவலகத்தில புகார் கொடுத்தார்கள் என்றாலும் அதனால் முன்விரோதம் வைத்திருந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஒரு பெண்ணை வைத்து புகார் கொடுத்தால் வழக்கு தாக்கல் செய்யலாம் மற்றும் வீரியமாக இருக்கும் என்பதால் அ.சா.2 ன் மூலமாக வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரியல்ல.

35. எதிரிகள் ஒருபோதும் அ.சா.2 அசிங்கமாக பேசவும் இல்லை அவரை அடிக்கவும் இல்லை என்றாலும் மேலும் அவரை மானபங்கம் செய்யும் நோக்கத்தோடு எந்த ஒரு காலத்திலும் நடந்துகொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. மாறாக அ.சா.2 தான் அ.சா.1 மற்றும் அ.சா8 ன் பேச்சை கேட்டுகொண்டு எதிரிகள் வீட்டருகே சென்று சண்டை இட்டு அசிங்கமாக நடந்துக்கொண்டார் என்றால் சரியல்ல. அ.சா.2 அவராகவே பாதுகாப்பான இடத்தில் ஒரு கீரலை போட்டுக்கொண்டு எதிரிகள் மீது தவறாக புகார் கொடத்தார் என்றாலுரு, இவை அனைத்தும் எனக்கு தெரியும் என்றாலும் அதை மறைத்து எதிரிகள் மீது தவறாக இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

36. நான் சம்பவ இடம் செல்லமால் காவல் நிலையத்தில் வைத்து பொய்யாக ஜோடனை செய்த வழக்கு என்றால் சரியல்ல.

**மறு விசாரணை**

இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

Sd/-N.Preethi

District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.